இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 13.01.2026

# குறள் வாரம்!

திருக்குறள் பரப்பும் முயற்சியை முழுமூச்சோடு செய்து வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

குறள் வாரம் நிகழ்ச்சிகள் 2026 ஜனவரி திங்களில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் சீரும் சிறப்புமாக நடைபெற வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவு இட்டுள்ளார்.

**‘குறள் வாரம்’ என்ற தமிழ் முன்னெடுப்பின் போது திருக்குறள் நாட்டிய நாடகம், இசை நிகழ்ச்சி, குறள் சார்ந்த ஓவியப் போட்டி, குறள் ஒப்புவித்தல் போட்டி, கல்லூரி மாணவர்களுக்கான குறள் சார்ந்த கலை நிகழ்ச்சிகள், படத் தொகுப்பு, ஒளிப்படப் போட்டி, திருக்குறள் சார்ந்த பட்டிமன்றம், அரசு அலுவலர்கள், பணியாளர்கள், ஆசிரியர்கள் பங்கேற்கும் குறளாசிரியர் மாநாடு, குறள் வினாடி வினா, ஜேம்ஸ் வசந்தன் அவர்களின் தமிழோசை நிகழ்ச்சி ஆகியவை நடைபெற இருக்கின்றன. தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் இவை நடைபெற இருக்கின்றன. திருக்குறள் சார்ந்த முதல்நிலைத் தேர்வு அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது.**

தமிழ்நாடு குறள் நாடு ஆக அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறார் முதலமைச்சர் அவர்கள். திராவிட மாடல் ஆட்சி அமைந்தது முதல் குறள் பரப்பும் பணியைத் தொய்வில்லாமல் செய்து வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.

2021 ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வாயிலாக ‘தீராக்காதல் திருக்குறள்’ என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகள் நடத்திட சிறப்புநிதியாகரூ.2.00கோடிஒதுக்கீடுசெய்யப்படும்எனஅறிவிக்கப்பட்டது. இதன் முதல் நிகழ்வாக **மாநில அளவில் உள்ள 12 ஆயிரம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கென திருக்குறள் ‘குறளோவியப் போட்டி’ நடத்தப்பட்டு, 365 ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெற்றி பெற்ற மூன்று மாணவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. இப்போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 356 ஓவியங்கள் தினசரி நாட்காட்டியாக அச்சிடப்பட்டுள்ளது.**

மாணவர்கள் வரைந்த ஓவியங்களைப் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பார்வையிடும் வண்ணம் சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்திலும், மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற சித்திரைப் பொருட்காட்சியிலும் காட்சிப் படுத்தப்பட்டது. மேலும், ‘குறள் இனிது’ என்ற பெயரில் திருக்குறள் நாட்டிய நாடகங்கள் நடத்தப்பட்டுள்ளது.

**திருக்குறளின் 1330 குறட்பாக்களையும் முழுமையாக முற்றோதல் செய்யும் மாணவர், மாணவியர்களின் திறமையை ஊக்குவித்துப் பாராட்டும் வகையில் அவர்களுக்கு குறள் பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழும் தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 598 பள்ளி மாணாக்கர்களுக்கு குறள் பரிசுத் தொகையாக ரூ.78 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.**

2024 ஆம் ஆண்டு விருதுநகர் மாவட்ட நிர்வாகம் - தமிழ் இணையக் கல்விக் கழகம் சார்பில் மாணவர் ‘திருக்குறள் மாநாடு’ நடத்தப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் இருந்து 800 மாணவர்கள் பங்கேற்றனர். 200 ஆசிரியர்கள் பங்கேற்றனர். அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலுக்கு தனித்தனியாக மாணவர்களால் வரையப்பட்ட குறள் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தன. திருப்பூரில் முத்தமிழறிஞர் கலைஞரின் ‘குறளோவிய நாட்டிய நாடகம்’ நடைபெற்றது.

2024 டிசம்பர் 31- 2025 சனவரி 1 ஆகிய இருநாட்களும் கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலையின் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழாவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டாடினார்கள். அதில் உரையாற்றிய முதலமைச்சர் அவர்கள், **“வள்ளுவம் - என்பது வாழ்வியல் நெறியாக மாற வேண்டும். சமுதாயம் - குறள் சமுதாயமாக மலர வேண்டும். வேற்றுமையின் வேர்களைக் கிள்ளியெறிய வள்ளுவ மருந்தே பொது மருந்தாக ஆகுதல் வேண்டும்”** - என்று சொன்னார்கள்.

தலைநகர் சென்னையில் வள்ளுவருக்கு மாபெரும் கோட்டம் எழுப்பினார் கலைஞர். அதனை கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளாமல் சிதைத்தார்கள். அக்கோட்டத்தை மீண்டும் சீரமைத்து எழுப்பி இருக்கிறார் இன்றைய முதலமைச்சர். தினந்தோறும் பல்வேறு விழாக்கள் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்று வருகின்றன. இந்த வரிசையில்தான் குறள் வாரம் குறித்த அறிவிப்பையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள்.

கவிப்பேரரசு வைரமுத்து எழுதிய ‘வள்ளுவர் மறை - வைரமுத்து உரை’ என்ற நூலை வெளியிட்டு உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், **திருக்குறளை தேசிய நூலாக ஆக்கும் முயற்சியைத் தீவிரப்படுத்த வேண்டும் என்றும், இதனை முன்னெடுக்கும் அமைப்பு ஒன்றை தலைநகர் டெல்லியில் அமைக்க வேண்டும்** என்றும் சொல்லி இருக்கிறார்கள்.

**“குறளை பொறுத்தவரை என்னுடைய கருத்து - ஆரியக் கலை, பண்பு, ஒழுக்கம், நெறி முதலியவை யாவும் பெரிதும் தமிழர்களுடைய பண்பு, நெறி, ஒழுக்கம் முதலியவைகளுக்கு தலைகீழ் மாறுபட்டதென்பதும் அம்மாறுபாடுகளைக் காட்டவே சிறப்பாக குறள் உண்டாக்கப்பட்டது என்பதும் உறுதியான கருத்தாகும்”** என்றார் தந்தை பெரியார். **‘நமது மதம், குறள் மதம்’** என்றார் பெரியார்.

**“குறள் வகுப்பறையில் மட்டுமல்லாமல் - உங்கள் இல்லங்களில் மட்டுமல்லாமல் - உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்”** என்றார் பேரறிஞர் அண்ணா. அத்தகைய குறள் அறிவுத் திருவிளக்கை, திக்கெட்டும் பரப்பிடும் பணியை தம் ஒப்பற்றக் கடமையாய்க் கருதிச் செயற்பட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர். குறள் பரப்பும் ஆசானாக வலம் வந்தார் கலைஞர். அதனையே தொடர்கிறார் இன்றைய முதலமைச்சர் அவர்கள்.

**குறளோவியம் தீட்டிய கலைஞர் வழி ஆட்சியானது, குறளோவிய நாடாக மாநிலத்தை மாற்ற அயராது பாடுபடுகிறது.**

# திராவிட மாடல் ஆட்சி மீண்டும் மலர பொங்கல் திருநாளில் சபதம் ஏற்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு – இனமானப் பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச்செல்வன் கடிதம்!



அன்பு கெழுமிய நண்பர், தலைவர், திராவிட மாடல் அரசின் மானமிகு முதல்வர் ஸ்டாலின் அவர்களே,

அன்பான வணக்கம்,

திராவிடத் திருநாளாம் பொங்கல் மற்றும் தைப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

இவ்வாண்டு தங்களது கொளத்தூர் தொகுதியில் தாங்கள் கொண்டாடிய சமத்துவப் பொங்கல் புகைப்படங்களைக் கண்டு அகமகிழ்ந்தேன்.

‘எல்லோருக்கும் எல்லாம்’ என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஆட்சி அதிகாரத்தை செலுத்தும் மாலுமியான தாங்கள், எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலிலும் மகத்தான வெற்றி பெற்று ஆண்டு 2027லும் சமத்துவப் பொங்கலை கொண்டாட மனமார வாழ்த்துகிறேன்.

தைப் பொங்கல் திருநாளையொட்டி தாங்கள் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு பரிமாறியதையும், அவர்களிடையே அமர்ந்து உணவு உண்டதையும் கண்ணுற்ற சமயம் உங்களைப் பெற்ற தந்தையான முத்தமிழறிஞர் கலைஞரும், பெறாத பிள்ளையாக கருதிய இனமானப் பேராசிரியரும் அகமகிழ்ந்து போயிருப்பார்கள்.

உங்களது கரங்களில் கழகம் மென்மேலும் வளரும் என்ற உறுதியுடன் இயற்கையை தழுவியவர்கள் இவ்விருவரும், அவர்கள் எண்ணியதை எண்ணியப்படிக்கும் மேலாக கழகக் கொள்கைகளை நிறைவேற சலியாது உழைக்கிறீர்கள்.

**உங்களது தலைமைப் பண்புகளுக்கு சான்றாக விளங்குகிறது இன்றைய தமிழ்நாடு. ‘திராவிட மாடல்’ எனும் பாதுகாப்பு வளையம் அமைதி, சகோதரத்துவம், மதநல்லிணக்கம், முற்போக்குச் சிந்தனை, முன்னேற்றப்பாதை, கல்வி வளர்ச்சி எனத் தமிழ்நாட்டை இந்திய அளவில் முன்னணி மாநிலமாக மாற்றி வருகிறது.**

**பொருளாதார வளர்ச்சி, சமச்சீரான வளர்ச்சி, தனிநபர் வருமானத்தில் சிறப்பான இடம், உயர்கல்வியில், சுகாதாரத்தில், உள்கட்டமைப்பு வளர்ச்சியில் அசுர வேகத்தில் தமிழ்நாடு வளர்கிறது.**

திராவிட மாடல் அரசுக்கு மக்கள் ஆதரவு பெருக, பெருக கடமையும் பொறுப்பும் அதிகமாகிறது. எதிர்பார்ப்பும் கூடுகிறது. மக்கள், கழகத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையும் பொறுப்பும் அதனைக் காப்பாற்ற கழகத்தவர் கடினமாக உழைக்க வேண்டும். அனைவரும் இணைந்து பாடுபட வேண்டும். கழகத்தின் வளர்ச்சியும், மேன்மையும் ஒருவரால் நடைபெறுவது கிடையாது, அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டால் மட்டுமே வெற்றிகளைக் குவிக்க முடியும்.

சாதனைகளின் நாயகராக திகழும் திராவிட மாடல் ஆட்சி மீண்டும் மலர்ந்து தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உயர்த்த துடிக்கும் உங்கள் கரத்தை வலுப்படுத்த சபதமேற்க இத் தைப் பொங்கல் திருநாளில் கழகத்தவர் அனைவரும் சபதமேற்போம் !! மீண்டும் தைப் பொங்கல் திருநாள் வாழ்த்து களையும், தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்து களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றிணைவோம்! வெல்வோம்!! படைப்போம் வரலாறு!!!

வாழ்க உங்கள் கொற்றம்!!!

வளர்க! வெல்க!! உங்கள் தமிழர் தொண்டு!!!

வாழ்க தி.மு.க.!!!!

இவண்,

**அ. அன்புச்செல்வன்**

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில்

# சர்வதேச இளையோர் பாய்மரப் படகு சாம்பியன்ஷிப் - 2026 போட்டி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கம் அணிவித்து பாராட்டு!

சென்னை, ஜன.13 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை துறைமுகத்தில் 6.1.2026 முதல் 9.1.2026 வரை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற இந்திய சர்வதேச இளையோர் பாய்மரப் படகு சாம்பியன்ஷிப் 2026 போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பதக்கம் அணிவித்து பாராட்டு தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு தமிழ்நாட்டின் வீரர்கள் பிற நாடுகளுக்குச் சென்று சர்வதேச போட்டிகளில் பதக்கங்கள் வெல்ல செய்வதோடு நிற்காமல், உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கு பெறும் வகையில் சென்னையில் ஆசிய, சர்வதேச அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை தொடர்ந்து நடத்தி, சென்னையை இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாகவும், உலகின் முக்கிய நகரமாகவும் உருவாக்கி வருகிறது.

அதன் அடிப்படையில் மாமல்லபுரத்தில் 186 நாடுகளைச் சார்ந்த சதுரங்க விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற 44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி, உலகமே சென்னையின் அழகை கண்டுகளித்த சென்னை பார்முலா 4 இரவு நேர சாலை கார்பந்தயம், சென்னை ஓபன் (WTA) சர்வதேச டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2022 போட்டி, ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2023 போட்டி, 7ஆவது “ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி (ஆடவர்) சென்னை - 2023” போட்டி, 2023ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச அளவிலான உலக சர்ஃபிங் லீக் போட்டி, HCL சைக்ளோத்தான் (CYCLOTHON) போட்டி, ஏடிபி சேலஞ்சர் 100 சர்வதேச ஆண்கள் டென்னிஸ் போட்டி, ”சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2025” என பல்வேறு சர்வதேச போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சமீபத்தில் சென்னை மற்றும் மதுரையில் ஹாக்கி ஜூனியர் ஆடவர் உலகக் கோப்பை தமிழ்நாடு 2025 போட்டிகள் சிறப்பாக நடத்தப் பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டிற்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் இந்திய சர்வதேச இளையோர் பாய்மரப் படகு சாம்பியன்ஷிப் 2026 போட்டி (SDAT INDIA INTERNATIONAL YOUTH SAILING CHAMPIONSHIP IIR) சென்னை துறைமுகத்தில் 6.1.2026 முதல் 9.1.2026 வரை பல்வேறு வகையிலான பாய்மர படகுப்போட்டிகள் போட்டிகள் நடத்தப்பட்டன.

இப்போட்டிகளில் இந்தியா, இங்கிலாந்து, ஸ்ரீலங்கா, சீசெல்ஸ், மொரிசியஸ், மலேசியா, அயர்லாந்து மற்றும் ஸ்வீடன் ஆகிய 8 நாடுகளைச் சேர்ந்த 12 வயது முதல் 18 வயது வரையிலான 87 படகோட்டும் விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர்.

இப்போட்டிகளில் இந்தியா சார்பில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 27 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.

இப்போட்டிகளில் இந்திய அணி 6 தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலம் என மொத்தம் 12 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்தது. அயர்லாந்து 1 தங்கம், 1 வெண்கலம் என 2 பதக்கங்களையும், மலேசியா 1 வெள்ளிப் பதக்கத்தையும் வென்றது.

இதுவரை பாய்மரப் படகுப்போட்டிகளை தொலைக்காட்சிகளில் மட்டுமே பார்த்து ரசித்த சென்னை மக்களுக்கும் இந்திய ரசிகர்களுக்கும் இந்த போட்டி நீங்காத நினைவுகளை அளித்தது.

இப்போட்டியில் தமிழ்நாட்டு வீரர் கிருஷ்ணா வெங்கடாசலம் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். மேலும் தமிழ்நாட்டை சேர்ந்த வீராங்கனை நேத்ரா, வீரர்கள் வருண் மற்றும் கணபதி ஆகிய மூன்று பேரும் Olympics Sailing போட்டியில் பங்கேற்க தேர்வாகியுள்ளார்கள்.

இவர்கள் மூவரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் எலைட் திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் விளையாட்டு வீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று 10.1.2026 அன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய சர்வதேச இளையோர் பாய்மரப் படகு சாம்பியன்ஷிப் 2026 போட்டியில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பதக்கம் அணிவித்து பாராட்டு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இந்திய கடலோர காவல் படை டைரக்டர் ஜெனரல் பரமேஷ் சிவமணி, தமிழ்நாடு பாய்மர படகு சங்கத்தின் துணைத் தலைவர் அசோக் தாக்கர் உள்பட பாய்மரப் படகு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், அனைத்துத் துறை சார்ந்த திட்டங்களின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா முன்னிலையில் 10.01.2026 அன்று நடைபெற்றது. உடன் புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், மரு.வை.முத்துராஜா எம்.எல்.ஏ., முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பா.ஜெயசுதா மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.